தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **ID.No.** | **:** | **80/2021** | சாட்சியம் | **:** | **WW1** |
| **Name** | **:** | திரு. சாதிக் பாஷா | | | |
| **Date** | **:** | **23.10.2024** | | | |
| **Time** | **:** | **11.02 a.m to 11.49 a.m** | | | |

தொ.த.சா.**1** திரு. சாதிக் பாஷா என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை

நான் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் வேலை பார்க்கவில்லை தொழிற்சங்கத்தின் பொதுச் செயலாளராக உள்ளேன். எங்கள் தொழிற்சங்கத்தின் பெயர் சென்னை ஏற்றுமதி வளாக ஊழியர்கள் மற்றும் பொது தொழிலாளர்கள் சங்கம் ஆகும். சென்னை ஏற்றுமதி வளாகம் தாம்பரத்தில் உள்ளது. எதிர்மனுதாரர் நிறுவனம் இருங்காட்டுக்கோட்டை ,சிப்காட் வளாகத்தில் உள்ளது. எங்கள் சங்கத்தில் ஏற்றுமதி வளாக ஊழியர்கள் அல்லாமல் வேறு நிறுவனத்தில் வேலை பார்க்கும் தொழிலாளர்களும் உறுப்பினர்களாக சேரலாம் என்ற விதி உள்ளதா என்றால் உள்ளது அதனை தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். அதனால்தான் ஏற்றுமதி ஊழியர்கள் என்று மட்டும் சொல்லாமல் மற்றும் பொது தொழிலாளர்கள் சங்கம் என பெயர் வைக்கப்பட்டுள்ளது என்னுடைய மனுவுடன் பைலா தாக்கல் செய்யவில்லை. வழக்கில் சாட்சியம் அளிக்க பொது குழுவில் தீர்மானம் இயற்றப்பட்டது அந்த தீர்மானத்தை தாக்கல் செய்துள்ளேன். தொ.சா.ஆ.2 இல் எனக்கு தொழிற்தாவா எழுபது சம்பந்தமாக அனைத்து நடவடிக்கையும் எடுக்கலாம் என அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது அதில் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்றால் நடவடிக்கை எடுக்கலாம் என்பதில் சாட்சி அளிப்பதும் அடங்கும். இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க குறிப்பிட்டு அதிகாரம் வழங்கப்படாத காரணத்தினால் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு உரிமை இல்லை என்றால் தவறு. இன்றைய தேதியில்

எதிர்மனுதாரர் நிறுவனத்தில் தொழிலாளர்கள் என்ற நிலையில் சுமார் 60 பேர் வேலை பார்க்கிறார்கள் இந்த தொழிற்தாவா எழுப்பிய சமயத்தில் 20 பேர் வேலை பார்த்தனர். 20 தொழிலாளர்களின் எத்தனை பேர் எங்கள் சங்கத்தின் உறுப்பினர்கள் என்றால் 16 பேர். தொ.சா.ஆ.5 ல் எங்கள் சங்கத்தில் உறுப்பினராக இருப்பவர்களின் பெயர் விவரம் சொல்லப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தின் வரிசை எண் 649 ல் இருந்து 664 வரை உள்ளது. எங்கள் சங்கத்தில் உறுப்பினர்களாக இருக்கும் எதிர்மனுதாரர் நிறுவனத்தை சேர்ந்த 16 பேர் அதற்கு முன்னர் பெய்லி நிறுவனத்தில் வேலை பார்த்து வந்தனர். பெய்லி நிறுவனத்தை மூடிவிட்டார்கள். பெய்லி நிறுவனத்தை மூடியதற்கான முக்கியமான காரணம் எங்களுடைய தொழிற்சங்கமானது அவர்களுக்கு எதிராக பல வழக்குகளை தாக்கல் செய்து பிரச்சினை எழுப்பி வந்தது தான் என்றால் தவறு. எங்கள் சங்கம் பெய்லி நிறுவனத்திற்கு எதிராக பல தொழிற்தாவா எழுப்பியது என்றால் ஆமாம். எங்கள் சங்கம் எழுப்பிய தொழிற்தாவா மற்றும் பல பிரச்சனைகள் காரணமாக தான் வேலை நிறுவனம் மூடப்பட்டது என்பது தவறு. தொ.சா.ஆ.5 ஆவணத்துடன் தொழிற்சங்க பதிவு சட்டப்படி இணைக்கப்பட வேண்டிய அனைத்து ஆவணங்களும் இணைக்கவில்லை என்றால் Byelaw மட்டும் இணைக்கவில்லை. நாங்கள் வைத்த பொது கோரிக்கை முன்னிலைக்கு செட்டில்மெண்ட் எதுவும் ஏற்படவில்லை. 2017 முதல் 19 வரை எதிர்மனுதாரர் நிறுவனத்தில் அதன் தொழிலாளர்களுக்கு 10% சம்பள உயர்வு வழங்கப்பட்டது என்றால் எங்கள் தொழிற்சங்கத்தை சேர்ந்த தொழிலாளர்களுக்கு அதைவிட குறைவான விகிதத்தில் தான் சம்பள உயர்வு வழங்கப்பட்டது. 10% தொகை என்பது தோராயமாக எவ்வளவு இருக்கும் என்றால் நினைவில்லை. எந்தவித பாகுபாடும் இல்லாமல் அனைத்து தொழிலாளர்களுக்கும் ஒரே சதமான ஊதிய உயர்வு தான் வழங்கப்பட்டது என்றாலும் எங்கள் தொழிற்சங்கத்தை சேர்ந்த தொழிலாளர்களுக்கு குறைவான ஊதிய உயர்வு வழங்கப்படவில்லை என்றாலும் தவறு. எந்த வருடத்திற்கு பொது கோரிக்கை முன்வைக்கப்பட்டது என்ற விவரம் சமரச அதிகாரி முன் தாக்கல் செய்த மனுவிலோ இந்த நீதிமன்றத்தில் தாக்கல்

செய்த மனுவிலோ சொல்லப்பட்டுள்ளது என்றால் இல்லை. 06.12.2017, 15.11.2017 ஆகிய இரண்டு பதில்கள் மட்டுமே நாங்கள் எழுப்பிய தொழிற்தகராருக்கு எதிர்மனுதாரர் நிறுவனம் பதில் அளித்தது. 29.11.2017,29.01.2018, 30.09.2019 ஆகிய தேதிகளிலும் பதில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் தவறு. மேற்படி பதில் மூலம் எதிர்மனுதாரர் நிறுவனமானது மற்ற தொழிலாளர்களுக்கு போன்று தொழிற்சங்கத்தை போன்ற தொழிலாளர்களுக்கும் 10% ஊதிய உயர்வு வழங்கியது என சொல்லி உள்ளது என்றால் அதுபோன்ற பதிலே தாக்கல் செய்யப்படவில்லை. 2017 முதல் 2019 வரை காண காலகட்டத்திற்கு 10% ஊதிய உயர்வு பெற்றுக்கொண்ட பின்னர் அந்த காலகட்டத்திற்கு அதனை கேட்டு தொழிற்தாவா எழுப்ப இயலாது என்றால் தவறு. அந்ததொகை ஆட்சேபனையுடன் பெற்றுக் கொள்ளப்பட்டது. அவ்வாறு ஆட்சேபனையுடன் பெற்றுக் கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்பட்டதா என்றால் தொழிலாளர்கள் நேரடியாக தெரிவித்து பெற்றுக் கொண்டார்கள். தன்னிச்சையாக வழங்கிய 10 சதவிகித ஊதிய உயர்வு வேண்டாம் என மறுப்பு தெரிவித்து அதனை திரும்ப செலுத்த தொழிலாளர்கள் முற்பட்டனரா என்றால் இல்லை. எங்கள் தொழிற்சங்கத்தை சேர்ந்த உறுப்பினர்கள் நிர்வாகம் கொடுத்த 10 சதவிகித ஊதிய உயர்வு கணிசமானது என கருதிய காரணத்தினால் தான் பெற்றுக் கொண்டார்கள் என்றாலும் எனவே அதனை முன்வைத்து தொழிற்தாவா எழுப்ப இயலாது என்றால் தவறு. எங்கள் தொழிற்சங்கத்தை சேர்ந்த உறுப்பினர்கள் தவிர மற்ற தொழிலாளர்கள் 2021 மற்றும் 2024-ல் நிர்வாகத்துடன் ஒப்பந்தம் போட்டு உள்ளார்கள் என்றால் ஆமாம். எங்கள் சங்கத்தை சேர்ந்த உறுப்பினர்களான கணேஷ், வின்செண்ட், அன்பழகன், தாமோதரன் ஆகியோர் எங்கள் சங்கத்திலிருந்து விலகி மற்ற தொழிலாளர்கள் நிர்வாகத்துடன் ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டு ஒப்பந்தம் முன்னிலைக்கு பண பயன்களை அனுபவித்து வரும் விவரம் தெரியுமா என்றால் தெரியாது. பிரமாண வாக்குமூலம் சாட்சியம் தாக்கல் செய்வதற்கு முன்னர் எங்கள் சங்கத்தின் உறுப்பினர்களிடம் அவர்கள் செட்டில்மெண்ட் எதனையும்

தெரிந்து கொள்ளாமல் தாக்கல் செய்தேனா என்றால் விசாரித்தேனா இல்லையா என நினைவில்லை. நான் உறுப்பினர்களிடம் விசாரித்து தெரிந்து கொள்ளாமலேயே தவறான பிரமாண வாக்குமூல சாட்சியத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் தவறு. என்னுடைய பிரபல வாக்குமூலம் சாட்சியத்தில் விப்ரோ இன்ஃப்ரா ஸ்ட்ரக்சர் இன்ஜினியரிங் பற்றி எதற்காக தெரிவித்து உள்ளேன் என்றால் அங்கு வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு என்ன ஊதியம் வழங்கப்படுகிறது என்ற தகவலை தெரிவிக்க வேண்டி குறிப்பிட்டுள்ளேன். பல நிறுவனங்கள் இருக்கும் பொழுது எதற்காக மேற்படி நிறுவனத்தை மட்டும் குறிப்பிட்டு சொல்லி உள்ளேன் என்றால் அந்த நிறுவனம் எதிர்மனுதாரர் நிர்வாகம் இயங்கி வரும் அதே மண்டலத்தில் அதே வேலை தன்மையை செய்து வருவதால் சொல்லி உள்ளேன். அந்த நிறுவனம் எதிர்மனுதாரர் நிறுவனத்திற்கு ஈடான தொழில் செய்து வருவதாலும் அங்கு வழங்கப்படும் ஊதியத்தை விட எதிர்மனுதாரர் நிறுவனத்தில் குறைந்த ஊதியம் வழங்கப்பட்டு வருவதாலும் அதனை காட்ட தாக்கல் செய்துள்ளேன். மேற்படி விப்ரோ நிறுவனம் எப்போது தொடங்கப்பட்டது என தெரியாது. விப்ரோ நிறுவனம் சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்னர் தொடங்கப்பட்டது என்றால் தெரியாது. எதிர் மனுதாரர் நிறுவனம் எப்போது தொடங்கப்பட்டது என்றால் 2011 ல். விப்ரோ நிறுவனம் கடந்த 50 ஆண்டுகளில் மொத்தம் எவ்வளவு முதலீடு செய்துள்ளார்கள் என்ற விவரம் தெரியாது. எதிர் மனுதாரர் நிறுவனம் எவ்வளவு முதலீடு செய்துள்ளது என தெரியாது ஆனால் அதன் ஆண்டு வருமானம் சுமார் 140 இல் இருந்து 150 கோடி வரை இருக்கும். விப்ரோ நிறுவனத்தின் Total installed capacity எவ்வளவு என தெரியாது. எதிர் மனுதாரர் நிறுவனத்தின் Total installed capacity எவ்வளவு என நினைவில்லை. விப்ரோ நிறுவனத்தின் Total installed capacity யை விட எதிர் மனுதாரர் நிறுவனத்தின் Total installed capacity குறைவானது என்பது எனக்கு தெரியும் என்றாலும் அதனால் தான் வேண்டுமென்றே நினைவில்லை என்ற பதிலை அளிக்கிறேன் என்றால் தவறு. விப்ரோ நிறுவனத்தின் **Capacity utilisation** தெரியாது. எதிர்மனுதாரர் நிறுவனத்தின் Capacity utilisation

தெரியும் ஆனால் நினைவில்லை. மேற்படி விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றாலும் அதை தெரிவித்தார் என் வழக்கிற்கு எதிராக போகும் என்பதால் நினைவில்லை என சாட்சியம் அளிக்கிறேன் என்றான் தவறு. விப்ரோ நிறுவனத்தில் எத்தனை நேரடி தொழிலாளர்கள் இருக்கிறார்கள் எத்தனை ஒப்பந்த தொழிலாளர்கள் இருக்கிறார்கள் என்ற விவரம் தெரியாது. விப்ரோ நிறுவனத்தின் கடந்த 10 ஆண்டுகளில் ஆண்டு நிகர வருமானம் எவ்வளவு என தெரியாது. அதில் எத்தனை சதமானம் அவர்களுக்கு லாபம் கிடைத்தது என்ற விவரம் தெரியாது. ஒரு நிறுவனத்தின் எந்தவித முழு விபரமும் தெரியாமல் அந்த நிறுவனத்துடன் எதிர் மனுதாரர் நிறுவனத்தை ஒப்பீடு செய்து தவறான சம்பள உயர்வை கேட்கிறேன் என்றால் தவறு. விப்ரோ நிறுவனத்தின் Balance Sheet யை பார்த்ததில்லை. விப்ரோ நிறுவனம் எதிர்மனுதாரர் நிறுவனத்துடன் ஒப்பீடு செய்வதற்கு ஈடானது இல்லை என்றாலும் அதனால் எதிர் மனுதாரர் நிறுவனத்தை அதனுடன் ஒப்பீடு செய்தது தவறு என்றாலும் சரியல்ல. 2021 மற்றும் 2024 ல் மற்ற தொழிலாளர்கள் நிர்வாகம் கொடுத்த ஊதிய உயர்வை ஏற்றுக் கொண்டபோது எங்கள் தொழிற்சங்கமானது அதே ஊதிய உயர்வை தங்களுடைய உறுப்பினர்களுக்கும் வழங்க வேண்டும் என எதிர்மனுதாரர் நிறுவனத்தை அணுகி கேட்டார்களா என்றால் கேட்டார்கள் அது சம்பந்தமாக சமரச அலுவலர் முன் தெரிவித்தார்கள் சமரச அலுவலரின் அறிவுரையை ஏற்றுக்கொள்ளாமல் எங்கள் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளாமல் நிர்வாகம் எங்கள் தொழிற்சங்கத்தின் உறுப்பினர்களுக்கு அந்த தொகையை கொடுக்க முன்வரவில்லை. மற்ற தொழிலாளர்களுக்கு கொடுத்த ஊதிய உயர்வை தற்சமயம் வழங்கினால் பெற்றுக் கொள்ள தயாராக உள்ளோமா என்றால் உள்ளோம். நாங்கள் எழுப்பி இருக்கும் பொது கோரிக்கை நிலைக்கத்தக்கது அல்ல என்றாலும் அதனால் தொழிற்தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல. மற்ற தொழில் தொழிலாளர்களுக்கு கொடுத்த ஊதிய உயர்வை எங்கள் உறுப்பினர்கள் ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில் பொது கோரிக்கைகள் அனைத்திலும் முன் வைத்துள்ள வேண்டுகோளை விட்டு விட்டு வழக்கை மேல் நடத்த

வலியுறுத்தாமல் இருக்க தயாராக உள்ளோமா என்றால் மற்ற தொழிலாளர்களுக்கு கொடுத்த பணப்பயன்கள் எங்கள் உறுப்பினர்களுக்கும் கொடுக்கப்படும் பட்சத்தில் தயாராக உள்ளோம்.

Typed to my dictation, read over to interpreted to the witness and acknowledged by him to be correct.

Sd/-S.Sujatha,
Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:23.10.2024